## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு - 2015

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நிறுவனமொன்றினால் முன்னைய காலப்பகுதியின் போது ஏற்பட்ட பிழைகளைக் கண்டறிந்ததன் பின்னர் வழங்கப்பட முதலாவது நிதிக்கூற்றுத் தொகுதியின் சரிபார்த்தல்கள் பின்னோக்கிய ரீதியில் செம்மைப்படுத்த வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் ரூபா 11,739,604 தொகை திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின்போது மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக ஆணைக்குழுவிற்குக் கிடைத்த நிதியில் முறையே ரூபா 25,223,492 மற்றும் ரூபா 23,375,300 இன் கூட்டுத்தொகை ரூபா 48,598,793 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் மூலதனச் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 124,007,439 தொகை வெளி நிறுவனமொன்றிற்கான சொத்துக்களை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்தச் சொத்துக்கள் வெளி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட மற்றும் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அந்த முழுத் தொகையும் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கும் கொள்கை பின்பற்றப்பட்டமையின் காரணமாக அந்த சொத்துக்கள் எந்தவொரு நிறுவனத்தினதும் சொத்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிலும் கடந்த 3 வருடங்களிலும் மாத்திரம் வெளி நிறுவனங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 403,129,613 ஆக இருந்தது. அந்த சொத்துக்களுக்காக அரசாங்க மானியத்திற்கு மேலதிகமாக சபையினால் ரூபா 106,207,595 செலவிடப்பட்டிருந்தமையும் அது ஆணைக்குழுவின் வருமானச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையும் மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 468,920,000 தொகையான குறுங்கால வைப்பிற்காக கிடைத்த ரூபா 14,373,143 வட்டி மீண்டும் முதலீடு செய்யப்பட்டமையினால் அந்த முதலீட்டுக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக கிடைக்கவேண்டிய வட்டி வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது அரசாங்கத்தின் மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 21,806,808 பெறுமதியான சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,036,399 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடுகளுக்குச் சமமான தொகையொன்று காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின்போது மூலதனச் சொத்துக்களைக் சுவீகரிப்பதற்கான கிடைத்த ரூபா 18,189,547 தொகை மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்படாமல் மீண்டெழும் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் மூலதன மானியம் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 16,991,221 மூலதன வடிவிலான சொத்தொன்று மூலதனமாக்கப்படாமல் செயற்திட்ட செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பெஸ்தியன் மாவத்தை மலசலகூட முறைமை தொடர்பில் கிடைக்க வேண்டிய ரூபா 525,000 கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சரின் இணக்கப்பாடும் விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரமும் இன்றி மீளாய்வாண்டின் போது நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்களில் முறையே ரூபா 22,902,607 மற்றும் ரூபா 9,877,650 தொகைகள் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 157,694,985 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 162,252,416 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது மீளாய்வாண்டின் மிகை ரூபா 4,557,431 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 186,879,785 தொகை மற்றும் ரூபா 16,053,010 மிகையொன்றைக் காண்பித்த போதிலும், அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் கிடைக்காமையினால் 2013 ஆம் ஆண்டில் ரூபா 186,871,271 பற்றாக்குறையொன்றிற்கு உட்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம் அரச வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பன சீராக்கப்பட்டதன் பின்னர் 2013 ஆம் ஆண்டைத் தவிர ஆணைக்குழுவின் பங்களிப்பில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பங்களிப்பு ரூபா 316,144,073 ஆக இருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

வெளிநிறுவனங்கள் மற்றும் வெளிநபர்களினால் நேர அட்டவணைகளை நடைமுறைப்படுத்துதல், பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், பதவியுயர்வு, அதிவேக வீதி அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தல், பெஸ்தியன் மாவத்தையில் பஸ்நிலையத்தால் நடாத்திச் செல்லப்பட்ட ஆசனம் ஒதுக்கீடு செய்யும் அலுவலகத்தை அகற்றுதல், ஓட்ட நேரங்களை மாற்றுதல், பத்திரிகை அறிவித்தல்களுக்கு செலுத்தாமை போன்ற விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு எதிராக 46 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பிரயாணிகள் போக்குவரத்து சேவைகளுக்குரிய தேசிய கொள்கை தொடர்பாக இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொது மக்கள் போக்குவரத்துத் தேவைகளை மற்றும் பொது மக்கள் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்வதற்காக செயற்திறனான பேரூந்து போக்குவரத்து முறைமையொன்று அமுல்படுத்தப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஒழுங்கமைக்கப்பட்ட சட்டகமொன்றைத் தயாரித்தல் ஆணைக்குழுவின் செயற்பணியாக இருந்ததுடன் அதனை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவினால் 2009 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட போக்குவரத்துக் கொள்கையில் உள்ளடங்கிய பிரயாணிகளின் போக்குவரத்திற்குரிய சில விடயங்கள் தற்போது ஒத்துப்போகும் வகையில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்காக அரசிற்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு தேவையான ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரயாணிகள் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்யும் போது விஷேட தேவைகளுடன் உள்ள நபர்களுக்கு பேருந்து மேடைக்கும் பேரூந்திற்குள்ளும் உட்செல்லக்கூடிய வகையில் பேருந்து நிலையங்களை அமைப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு முன்னின்று செயற்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட பின்வரும் குறிக்கோள்களை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 40 கெம்செரிய பேரூந்து சேவைகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 சேவைகள் மாத்திரமே ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தது. அதனால் நிதியேற்பாடான ரூபா 20 மில்லியனில் ரூபா 13.26 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது பிரயாணிகளின் கோரிக்கை மற்றும் சேவை வழங்குதல் தொடர்பாக 50 மெய்மையாய்வுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதிவரையிலும் 24 மெய்மையாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 26 சதவீதமான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது மாகாணங்களுக்கிடையில் 514 வீதி நேர அட்டவணையைத் தயாரித்து அமுல்படுத்துவதற்கும், வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பேரூந்துக் கட்டணத்தை திருத்தி சரிசெய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மாகாணங்களுக்கிடையில் 210 வீதி நேரஅட்டவணைகள் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டு வடமாகாணத்திலும், வடமத்திய மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் ஒரு பகுதியின் பேரூந்துக் கட்டணம் மாத்திரம் திருத்தப்பட்டு சரி செய்யப்பட்டிருந்தது அதன் பிரகாரம் இதன் மொத்த செயல் முன்னேற்றம் முறையே 41 சதவீதம் மற்றும் 65 சதவீதம் ஆக இருந்தன.

(iv) பேரூந்து பிரயாணிகளுக்கு தூர பிரயாண சேவை பேரூந்து நிலையங்களை இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் 250 வரையறுக்கப்பட்ட தரிப்பிட சமிக்ஞை பதாதைகள் நாடு முழுவதும் ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த

போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் அத்தகைய 19 சமிக்ஞை பதாதைகள் மாத்திரமே பொருத்தப்பட்டிருந்தன. சமிக்ஞை பதாதையை நிர்மாணிப்பதற்கான செயல் முன்னேற்றம் 7.6 சதவீத அளவாக இருந்த போதிலும் அதற்கான மொத்த நிதியேற்பாடுகளில் 33 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) மெதகம மற்றும் கிண்ணியா பஸ் நிலையங்கள் இரண்டையும் நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 30,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போதே பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் பஸ் நிலையங்களில் நிர்மாணங்கள் முறையே 60 சதவீதம் மற்றும் 50 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(vi) வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது துூர பிரயாண சேவை பிரயாணிகளின் வசதிக்காக 05 குறுங்கால ஓய்வு நிலையங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாணங்களுக்கிடையிலான பேரூந்து மற்றும் மாகாணத்தினுள் போக்குவரத்து ஈடுபட்டுள்ள பேரூந்துகளின் நேர அட்டவணையை காட்சிப்படுத்தும் நோக்கில் ஆணைக்குழுவினால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 62,415,360 செலவிடப்பட்டு 07 இலத்திரனியல் திரைகள் கொழும்பு பெஸ்தியன் மாவத்தை, கொழும்பு, அனுராதபுரம், குருநாகல், நுவரெலியா, கதிர்காமம், இரத்தினபுரி மற்றும் புத்தளம் போன்ற இடங்களில் பொருத்தப்பட்டிருந்த போதிலும், அந்த திரைகள் யாவும் இரண்டு வருட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டன. 2016 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அந்த திரைகளை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்கு நிறுவகத்தின் முகாமைத்துவம் தவறியிருந்தது.

(ஆ) பெஸ்தியன் மாவத்தையிலுள்ள பேரூந்து நிலையத்தின் செயற்பாடுகளை அதன் முகாமையாளருக்கும் ஆணைக்குழுவின் தலைவருக்கும் தமது அலுவலகத்திலிருந்து மேற்பார்வை செய்யகூடிய வகையில் ரூபா 470,250 தொகை செலவில் 2014 யூன் மாதத்தின் போது பொருத்தப்பட்டிருந்த 16 சீசீரீவி கெமராக்களில் 09 கெமராக்கள் 2014 திசெம்பர் முதல் கணக்காய்வுத் திகதியான 2016 யூலை மாதம் வரையில் விளைவற்றுக் காணப்பட்டது. கெமரா செயற்பாடற்றிருந்த போதிலும் இணையதளம் தொடர்பில் அதற்காக மீளாய்வாண்டின் போது மாதத்திற்கு ரூபா 61,862 வீதம் ரூபா 742,341 தொகையொன்றைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக பாதையில் பேரூந்து ஓடுவதற்கான நிரந்தர அனுமதிப்பத்திரத்தினை விநியோகித்தல் 2016 யூன் 15 ஆந் திகதி வரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தெற்கு அதிவேக வீதியில் பல்வேறு பிரயாண இடங்கள் வரை 2015 யூலை 25 ஆந் திகதி முதல் பிரயாணத்தில் ஈடுபடுகின்ற பேரூந்துகளுக்காக நாளொன்றிற்கு ரூபா 2,500 வீதம் அறவிட்டு 65 தற்காலிக அனுமதிப்த்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 யூன் மாதம் வரையிலும் நிரந்தர அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாணங்களுக்கிடையிலான பேரூந்து ஓட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற முறையை செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேசிய போக்குவரத்து

ஆணைக்குழுவிற்கு நேரடியாக மேற்பார்வை செய்யக்கூடிய வகையில் ரூபா 79,061,375 தொகை செலவில் பேரூந்துகளில் பொருத்தப்பட்ட 2095 ஜீபீஎஸ் உபகரணங்களில் 1307 உபகரணங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சிறந்த முகாமைத்துவம் இல்லாமையிலும் முறையான பேணிச் செல்லப்பட்டமையாலும் ரூபா 37,512,288 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டுப்பாட்டு அறை பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

(உ) வீதி அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வராமையின் காரணமாக 2014 ஆம் ஆண்டின் போது கொழும்பு மற்றும் அண்மித்த பிரதேசங்களிலிருந்து வட கிழக்கு வரை 14 வீதிகளுக்காக 84 அனுமதிப்பத்திரங்களுக்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும், 2016 மே 31 ஆந் திகதி வரையில் 21 அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டது போன்றே மீளாய்வாண்டின் போதும் 10 வீதிகளுக்காக 13 அனுமதிப்பத்திரங்களுக்கு கூறு விலை கோரப்பட்டிருந்த போதிலும் 05 அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. கூறுவிலைகளைக் கோரும் போது போதியளவான கேள்விக் காப்பீடொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்வராதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) அதிவேக வீதிக்கு வெளியே சுற்றுவட்ட வீதி ஊடாக பிரதான நகரங்களுக்கு பேரூந்து போக்குவரத்துச் செய்யக்கூடிய இயலுமை தொடர்பாக சாத்திய வள ஆய்வொன்று மேற்கொண்டு அறிக்கையொன்றைப் சமர்ப்பிப்பதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மொறட்டுவ பல்கலைக்கழத்தின் மூலம் வரைவு உப அறிக்கையொன்று 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2015 செப்தெம்பர் 04 ஆந் திகதி ரூபா 1,418,310 தொகையொன்று முற்பணமாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

(எ) சகல பிரயாணிகள் போக்குவரத்து சேவைகளையும் ஒன்றிணைத்து சுழற்சி நேர அட்டவணையின் பிரகாரம் ஓடச் செய்தல் அரசின் கொள்கை ஆனமையால் 2013 திசெம்பர் மாதத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு முன்னின்று தயாரித்திருந்த ஒன்றிணைந்த நேர அட்டவணைக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

வவுனியா பேரூந்து நிலையத்தின் முதலாவது கட்டத்தின் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் யூன் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 104,746,181 தொகை செலவாகியிருந்தது. எனினும் பேரூந்து நிலையத்தின் காணியை மட்டமிடல் செயற்பாடுகள் இரண்டாம் கட்டத்தில் உள்ளடக்கப்பட்டமையினால், அந்தக் கட்டம் 2016 யூன் மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் பேரூந்து நிலையத்தை இது வரை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியாதிருந்தது.

### 4.4 வெளிப்படையான முறைமையின்மைகள்

சிசுசெரிய பேரூந்து போக்குவரத்திற்கான கொடுப்பனவுகளைப் பரீட்சித்த போது ஒரு பேரூந்து இரண்டு வீதிகளில் சிசுசெரிய பிரயாணத்தில் ஈடுபடுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டு இரண்டு நபர்களின் பெயரில் ரூபா 6,941,862 தொகை ஆணைக்குழுவால் வழங்கப்பட்டிருந்தது.

## 4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு

மீளாய்வாண்டின் போது பல்வேறு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பொதுத் திறைசேரியினால் ரூபா 685,000,000 தொகையொன்று ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 636,401,206 தொகை மாதாந்தம் பயன்படுத்தப்பட்டிருந்தது. முறையான எதிர்வுகூறலின்றி பணம் பெறப்பட்டமையின் அடிப்படையில் சேமிக்கப்பட்ட ரூபா 48,598,739 தொகை முதலீடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 4.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆவது பிரிவு மற்றும் 1985 இன் 1 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றின் பங்களிப்புப் பணம் மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகளை கணிப்பீடு செய்யும் போது உள்ளக படிகள் மற்றும் விஷேட படிகளுடன் பணிக்கொடை படிகள் கணிப்பீடு செய்யப்பட்டமையால் முறையே ரூபா 11,344,443 மற்றும் ரூபா 697,641 தொகையான பங்களிப்புப் பணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரையும் உள்ளபடியான பதவியணியினரையும் ஒப்பீடு செய்த போது 76 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் நிறைவேற்றுத்தரத்தில் 16 வெற்றிடங்கள் காணப்பட்டன. 2016 மே 31 ஆந் திகதி வரையில் அதில் 03 பதவிகள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தன. ஏனைய நிறைவேற்று பதவிகளுக்காக பதிற்கடமை அடிப்படையில் அப்பதவிகளின் கடமைகள் மேவுகை செய்யப்பட்டிருந்தன.

## 4.8 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2014 மார்ச் 06 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் செயற்குழுக் கூட்டத்தின் போது செல்லுபடியான வீதி அனுமதிப்பத்திரமின்றி பேரூந்து ஓடியமை தொடர்பில் உள்ள சட்டங்கள், விதிகள், போதியளவில் இல்லாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகாரச்சட்டத்திற்குரிய பிரிவுகள் திருத்தம் செய்யப்பட்டு இரண்டு மாத காலத்திற்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு இணங்கியிருந்த போதிலும் 2016 யூன் மாதம் வரையும் உரிய திருத்தம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரிய பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பீடு செய்தபோது 24 செலவின விடயங்களுக்குரியதாக 10 சதவீதம் முதல் 179 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 5.2 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவினால் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியினதும் கொள்வனவு செயற்பாட்டுக் கோவையில் காண்பிக்கப்படுகின்ற மாதிரியின் பிரகாரமும் 2015 ஆம் ஆண்டிற்காக பிரதான கொள்வனவுத்

திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தின் தகவல்கள் பாதீட்டுடனும் செயல்நடவடிக்கைத் திட்டத்துடனும் இணங்காமை, செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் பாதீட்டிலும் உள்ளடங்காத விடயங்கள் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டமை, கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் செயற்படாமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

## 5.3 ஆண்டிடறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 12(3) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்தச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2015 இன் ஆண்டறிக்கையின் வரைவொன்று வருடாந்த கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் தொடர்பாக ஆணைக்குழுவின் தலைவருக்கு அவ்வப்போது தெரியப்படுத்தப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஒப்பந்தக் கட்டுப்பாடு | உடன்படிக்கை நிபந்தனையின் படி நடவடிக்கை எடுக்காமை மற்றும் கேள்வி கோரலின் மூலம் பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாமை. |
| (ஆ) வாகனப் பயன்பாடு | நிதிபபிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் வாகனக் கட்டுப்பாடு இடம்பெறாமை மற்றும் அறிக்கை வைக்கப்படாமை. |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடங்களுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காமை. |